செ.வெ.எண்.359/2021 நாள்.31.08.2021

**திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் திருப்பத்தூர் மாவட்டத்திற்குட்பட்ட 2021 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஊரக உள்ளாட்சி தேர்தலுக்கான வார்டு வாரியான புகைப்படத்துன் கூடிய வாக்காளர் இறுதி பட்டியல் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார். அதனை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் பெற்றுக் கொண்டனர்.**

வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியல் இன்று முதல் மாவட்ட ஊராட்சி அலுவலகம், உதவி இயக்குநர் ஊராட்சி அலுவலகம். ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மற்றும் கிராம ஊராட்சி அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட உள்ளது. மேலும் அந்தந்த பகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல் நிலையினை அறியும் வகையில் ஆலங்காயம் பகுதி ஆண் வாக்காளர்கள் 47,165, பெண் வாக்காளர்கள் 47,141 மற்றவர்கள் 5 மொத்தமாக வாக்காளர் எண்ணிக்கை 94,311, மொத்த வாக்குச் சாவடி மையங்கள் 161 ஜோலார்பேட்டை பகுதி ஆண் வாக்காளர்கள் 68,350, பெண் வாக்காளர்கள் 68,894 மற்றவர்கள் 6 மொத்தமாக வாக்காளர் எண்ணிக்கை 1,37,250, மொத்த வாக்குச் சாவடி மையங்கள் 242 கந்தலி, பகுதி ஆண் வாக்காளர்கள் 59,513, பெண் வாக்காளர்கள் 59,704, மற்றவர்கள் 9 மொத்தமாக வாக்காளர் எண்ணிக்கை 1,19,226, மொத்த வாக்குச் சாவடி மையங்கள் 199 மாதனூர் பகுதி ஆண் வாக்காளர்கள் 59,174, பெண் வாக்காளர்கள் 63,320, மற்றவர்கள் 11 மொத்தமாக வாக்காளர் எண்ணிக்கை 1,22,505, மொத்த வாக்குச் சாவடி மையங்கள் 224 நாட்றம்பள்ளி பகுதி ஆண் வாக்காளர்கள் 38,692, பெண் வாக்காளர்கள் 38,219, மற்றவர்கள் 2 மொத்தமாக வாக்காளர் எண்ணிக்கை 76,913, மொத்த வாக்குச் சாவடி மையங்கள் 141 திருப்பத்தூர் பகுதி ஆண் வாக்காளர்கள் 57,065, பெண் வாக்காளர்கள் 56,837 மற்றவர்கள் 1 மொத்தமாக வாக்காளர் எண்ணிக்கை 1,13,903, மொத்த வாக்குச் சாவடி மையங்கள் 197 உள்ளன என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.கு.செல்வராசு, உதவி இயக்குநர் ஊராட்சிகள் திரு.அருண், மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**